மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இடம் கொடுத்தார், நல்ல காரியங்களைச் செய்தார் என்பதற்காகத்தான் அந்தப் பள்ளிக்கு—தனியார் பள்ளியாக இருந்தாலும் இலவசமாக சத்துணவை வழங்கி இன்றைக்கு பள்ளிப்பிள்ளைகள் பயனடையச் செய்திருக்கிறோம். ஏறத்தாழ 38,600 பள்ளிகள் இருக்கின்றன. அதிலே தனியார் பள்ளிகள் மட்டும் 7,726 இருக்கின்றன. நம்முடைய பள்ளிகளிலே பழுது பார்க்கின்ற பணி கட்டிட வேலைகளிலே, இன்னும் சிறப்பாக மேம்படுத்துகின்ற பணியெல்லாம் இருக்கின்ற காரணத்தினால் தனியார் பள்ளிக்கு அரசு இப்போதிருக்கின்ற நிதி நெருக்கடியில் உதவுவதற்கு இயலாது. சத்துணவை இலவசமாக வழங்குவதற்கு முடியும். ஆனால் இந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு அரசினால் பரிசீலனை செய்ய இயலாது. தனியார் யாராவது நன்கொடையாளர் வந்தால் அவருக்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறோம்.

திரு.எஸ்.ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவேகானந்தா உதவி துவக்கப்பள்ளி இன்றைக்கு கூரை கட்டிடத்திலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தப் பள்ளியிலே படிக்கின்ற பிள்ளைகள் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திலே பங்கு கொள்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு நல்லது செய்கின்ற வகையில் அந்தப் பள்ளியினுடைய நிர்வாகி கட்டடத்தில் பாதிச் செலவை ஒத்துக் கொண்டு வந்தால் மீதி பாதியை அரசு ஏற்று செய்ய ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கட்டிடங்களே நிரம்ப பழுதுபட்டு அந்தப் பணிகளை எடுத்துக்கொண்டு, ஒரு கோடி ரூபாய் செலவில் ஆண்டுதோறும் செய்து வருகிறோம். இந்த அரசு பழுது பார்க்கின்ற பணி முழுமையாக முடிகின்ற வரையிலே தனியார் பள்ளிகளுக்கு இத்தகைய நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 175, திரு. தா. செழியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

175—

ப. களத்தூர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***38555**—திரு. தா. செழியன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி ப. களத்தூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்ந்தறியும் அறிஞர்களின் அறிவுப் பெட்டகம், மரகத மாளிகையின் மாணிக்கப் பெட்டகம், இதய தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில்தான் இந்தியாவிலே கல்வித் துறையிலே இரண்டாவது இடத்தில் தமிழகம் பீடுநடை போடுகிறது. எனவே இந்தக் கல்வி ஆண்டில் அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி II திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவுக்கு ஏற்ப ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் பள்ளிகளை மேம்படுத்துகின்றோம். 1994-95 கல்வி ஆண்டில் 12 உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்பட்டன. இந்தப் பள்ளியில் 1993-94-ல் பயின்ற மாணவியரின் எண்ணிக்கை 665. அதில் 10-ம் வகுப்பில் 91 மாணவ மாணவியர் மட்டுமே இருந்தார்கள். பொதுமக்கள் பங்குத்தொகையாக ஒரு லட்சம் ரூபாய் செலுத்தியிருக்கிறார்கள். இதற்கான கருத்துருவை இந்த ஆண்டு மேல்மட்டக் குழு பரிசீலிக்கும். குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும், நிதிநிலை அடிப்படையிலும் 10-ஆம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவியர் எண்ணிக்கை அடிப்படையிலேயும் இடவசதியைக் கருத்தில் கொண்டும் இதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

முற்பகல் 10.35

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் கல்வி ஆண்டில் ஏறத்தாழ 2,233.17 கோடி ரூபாய் நிதியினை இந்தக் கல்வித் துறைக்கு ஒதுக்கித் தந்து, இந்தக் கல்வித் துறையைத் தனிப்பெரும் துறையாக ஆக்கியிருக்கின்ற தமிழக முதல்வருடைய ஆட்சியில் இந்த உயர்நிலைப் பள்ளியானது, ஏறத்தாழ 700 மாணவ மாணவிகளைக்

கொண்டது. இதைச் சுற்றிலும் அருகாமையில் இருக்கின்ற 35 கிலோமீட்டர் தொலைவில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், அதேபோல பசும்பலூர் என்ற ஊரில் 10 கிலோமீட்டர் தொலைவில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 15 கிலோமீட்டர் உள்ள கைகலத்தூரில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 20 கிலோமீட்டர் உள்ள வாலிகண்டபுரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள வேப்பன்தட்டையில் ஒரு உயர்நிலைப் பள்ளியும் இருக்கிறது. எனவே, ஏறத்தாழ 20 கிராம சுற்றளவிலே இங்கே மேல்நிலைப் பள்ளி இல்லை. எனவே, திருக்கோவில் நிர்வாகத்தின் திருவாசகம், நான் தினமும் பூஜிக்கும் சுப்ரபாதம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் வருகின்ற கல்வி ஆண்டிலே இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகிலே இருக்கின்ற லப்பைகுடிகாடு அரசு உயர்நிலைப் பள்ளியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். 2,233 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டாலும்கூட பகுதி-2 திட்டத்திலே எந்த அளவிற்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த அடிப்படையிலேதான் பள்ளிகளை மேம்படுத்த முடியும். கருத்துரு வந்திருக்கிறது. மேல்மட்டக் குழு பரிசீலிக்கும். விதிமுறைகளின் அடிப்படையில் இதைப்பற்றி அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 176, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

176—

குப்பை சேகரிப்போர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்

***23704**—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குப்பைப் பொருட்கள் சேகரிப்போருக்கு போதுமான விலை கிடைக்கப் பெறாமையால் குப்பைப் பொருள் சேகரிப்போர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?